www.tamilarangam.net

தினகரன் 1995ம் வருடம் ஜனவரி மாதம் 14ம் திகதி சனிக்கிழமை

தினகரன்
The Thinakaran

மார்கழி மாதம் 30ம் திகதி சனிக்கிழமை

யானைகளை வரட்டுவதில ...

## அரச சேவையின் உயர்பதவிகளில்

# இன விகிதாசாரத்துக்கேற்ப போதிய தமிழ் பேசும் அதிகாரிகள் இல்லை

### -டக்ளஸ் தேவானந்தா

இலங்கை பல்லின மக்களைக் கொண்டுள்ள தீவாகும். எனவே அரசாங்கத்தினால் செய்யப்படும் நியமனங்கள் யாவும் பல்லின மக்களின் பிரதிநிதித்துவத்தை பிரதிபலிப்பதாக அமைய வேண்டும். சிற்றூழியர், இலிகிதர்கள், மற்றும் இலங்கை நிர்வாக திட்டமிடல் போன்ற சேவைகளில் தேசிய இன விகிதாசாரப்படி நியமனங்கள் செய்யப்பட்ட போதிலும் அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர், திணைக்களத் தலைவர்கள், கூட்டுத்தாபன சட்டவாக்க நிறுவனங்கள், வெளிநாட்டு தூதரகங்களின் தலைமைப் பதவிகளின் நியமனங்களில் மேற்கூறிய சமநிலை கடைப்பிடிக்கப்படவில்லை என்று ஈ.பி.டி.பி. செயலாளரும் யாழ். மாவட்ட எம்.பி.யுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இலங்கை நிர்வாக திட்டமிடல் சேவைகளிலும் அது போன்ற சமமான மற்றைய சேவைகளிலும் போதிய தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் கடமையில் உள்ள போதிலும், பொதுச் சேவையில் உயர் பதவிகள் வழங்கப்படாததை அவதானிக்கிறேன் என உயர் பதவிக்கான பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு கடந்த 12ம் திகதி அளித்த மகஜரில் குறிப்பிட்டுள்ளார். மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உதாரணமாக, கல்வி, உயர்கல்வி அமைச்சை எடுத்துக் கொண்டால், அது ஒரு முக்கியமான அமைச்சாகும். அங்கு தமிழ் பேசும் செயலாளர்களோ அல்லது மேலதிகச் செயலாளர்களோ இல்லை. சுமார் பதினைந்து அமைச்சுக்களில் தமிழ் பேசும் செயலாளர் அல்லது மேலதிகச் செயலாளர் ஒருவர் கூடக் கிடையாது.

ஜனாதிபதி செயலகம், பிரதமரின் அலுவலகம், எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் போன்ற முக்கியமான அலுவலகங்களில் தமிழ் பேசும் அதிகாரிகள் உயர் பதவிகளில் இல்லை. மேலதிக செயலாளர்களாகத் தமிழ் பேசும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டாலும் அவர்களுக்கு முக்கிய மற்ற சாதாரண பொறுப்புக்களே ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஏமாற்றம், திருப்தியற்ற நிலைமை மூத்த தமிழ் பேசும் உத்தியோகத்தர்களின் மனோ திடத்தைப் பாதிப்பதை தாங்கள் உணர்வீர்கள்.

திறமையாக, சுறுசுறுப்பாக, களங்கமின்றிக் கடமை புரிந்த சில மூத்த உத்தியோகத்தர்கள் அவர்களது உயர்ச்சிகளில் புறக்கணிப்பப்படுவதை நான் அவதானித்துள்ளேன்.

பொதுச் சேவையின் உயர் பதவிகளில் போதிய எண்ணிக்கையான தமிழ் பேசும் உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு உரிய துரித நடவடிக்கை எடுப்பீர்களாயின் நான் மிகவும் நன்றியுடையவனாக இருப்பேன்.

இலங்கை நிர்வாக சேவையில் உள்ள முதல்தரத்திலான தமிழ் பேசும் உத்தியோகத்தர்களை அமைச்சின் செயலாளர்களாக, மேலதிக செயலாளர்களாக, திணைக்கள கூட்டுத்தாபன தலைவர்களாக, வெளிநாட்டுத் தூதராலயம் போன்றவைகளின் தலைமை அதிகாரிகளாக நியமிக்க முடியும்.

## கத்தோலிக்க...

(1ம் பக்கத் தொடர்)

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் பாப்பரசரின் விஜயம் குறித்த செய்திகளை பரிமாறவென விசேட செய்திச் சேவை நிலையம் ஒன்றும் இயங்கும். இங்கிருந்து சர்வதேச ரீதியாகவும் வெளிநாட்டுப்பத்திரிகையாளர்கள் இயங்க முடியுமெனத் தெரிவிக்கப்-

## பேராதனை குறிஞ்சிக்குமரனுக்கு தைப்பூசத் திருவிழா

(கண்டி நிருபர்)

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தைப்பூசத் தினத்தன்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள அருள்மிகு குறிஞ்சிக் குமரன் ஆலயத்தில் பத்தாம் நாள் பூசையும், பிற்பகலில் லயஞான கலாநிதி குமரகுருவின் தவில் கச்சேரியும் நடைபெறவுள்ளன. அத்துடன் பிற்பகல் ஐந்து மணியளவில் கொழும்பு ஸ்ரீஇராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் ஆத்மகனானந்தாஜி மகாராஜ் அவர்களின் ...

இந்த விஜயத்தின் போது கொழும்பு பாத்திமா கல்லூரியின் வளர்ச்சிக்காக தாம் கச்சேரி செய்ததாகவும் ஒட்டமாவடியில் கச்சேரி ஒன்று ஏற்பாடு செய்து முதல் த... குறித்த திகதியில் பெரும் மழை காரணமாக கச்சேரியை, கச்சேரி அமைப்பாளர்கள் ஒத்தி வைத்ததாகவும் தாம் போய் விட்டு திரும்பியதாகவும் அதையிட்டு மற்றொரு திகதி கொடுத்ததாகவும் அந்த குறித்த திகதியில் தாம்

## காங்கிரஸ் உறு... எதிராக நடவ...

திருவனந்தபுரம், ஜன. 1... காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கை கட்சியில் எழும் பிரச்சினைகளை சமாளிக்க உதவாது என்று காங்கிரஸ் கட்சியின் நிருவாகக் ... உறுப்பினர்களான ஏ. கே. அந்தோனி, கேரள மாநில முதலமைச்சர் கே. கருணாகரன் ஆகியோர் வெள்ளிக்கிழமையன்று உறுதி செய்தனர்.

காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் எவர்மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படக் கூடாது என்று பிரதமர் பி. வி. நரசிம்மராவை அண்மையில் சந்தித்தபோது கேட்டுக் கொண்டதாகவும் திரு. அந்தோனி ஒரு பத்திரிகையாளர்...

## ஐந்து சீக்கியர் பொலிஸ்காரருக்...

புதுடில்லி, ஜன.1... முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் கொலைச் சம்பவத்தையடுத்து பாரோட் பொலிஸ் நிலையத்தில் ஒரு பொலிஸ்காரர் ஐந்து சீக்கியர்களை...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

VIRAKESARI
வீரகேசரி

ஜனவரி 14ஆம் திகதி சனிக்கிழமை 1995.



# "பொது சேவை உயர் பதவிகளில் போதிய தமிழ் பேசும் உத்தியோகத்தர்களை நியமிக்கவும்"

## • உயர் பதவிகளுக்கான பாராளுமன்ற தெரிவு குழுவிடம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. கோரிக்கை

(நமது நிருபர்)

பொதுச் சேவையின் உயர் பதவிகளில் போதிய எண்ணிக்கையான தமிழ் பேசும் உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு உரிய, துரித நடவடிக்கை எடுக்குமாறு, ஈ.பி.டி.பி. யின் செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், உயர் பதவிகளுக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா, உயர் பதவிகளுக்கான பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு நேற்று முன்தினம் (ஜன.12) சமர்ப்பித்த மகஜரில் கோரியுள்ளார்.

அவர் தமது மகஜரில் தெரிவித்திருப்பதாவது:-

''இலங்கை ஒரு பல்லின மக்களைக் கொண்டுள்ள தீவாகும். எனவே அந்நாட்டரசினால் செய்யப்படும் நியமனங்கள் யாவும் பல்லின மக்களின் பிரதிநிதித்துவத்தை பிரதிபலிப்பதாக அமைய வேண்டும். சிற்றூழியர், இலிகிதர்கள் மற்றும் இலங்கை நிர்வாக திட்டமிடல் போன்ற சேவைகளில் தேசிய இன விகிதாசாரப்படி நியமனங்கள் செய்யப்பட்ட போதிலும், அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர், திணைக்களத் தலைவர்கள், கூட்டுத்தாபன சட்டவாக்க நிறுவனங்கள், வெளிநாட்டு தூதராலயங்களின் தலைமைப் பதவிகளின் நியமனங்களில் மேற்கூறிய சமநிலையைக் கடைப்பிடிக்காமையை நான் அவதானிக்கிறேன்.

இலங்கை நிர்வாக திட்டமிடல் சேவைகளிலும், அது போன்ற சமமான மற்றைய சேவைகளிலும், போதிய தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் கடமையில் உள்ள போதிலும், பொதுச் சேவையில் உயர் பதவிகள் வழங்கப்படாததை அவதானிக்கிறேன்.

உதாரணமாக கல்வி, உயர்கல்வி அமைச்சை எடுத்துக் கொண்டால், அது ஒரு முக்கியமான அமைச்சாகும். அங்கு தமிழ் பேசும் செயலாளர்களோ அல்லது மேலதிக செயலாளர்களோ இல்லை. கீழ் வரும் அமைச்சுக்களில் தமிழ் பேசும் செயலாளர் அல்லது மேலதிக செயல்லாளர் ஒருவர் கூடக்கிடையாது.

கல்வி, உயர்கல்வி அமைச்சு.

கடல் தொழில், நீரக வள மூலங்கள் அமைச்சு. இளைஞர், விவகார, விளையாட்டுத்துறை, கிராமிய அபிவிருத்தி அமைச்சு. சுகாதார, நெடுங்சாலைகள், சமூக சேவைகள் அமைச்சு. தகவல், சுற்றுலாத்துறை, விமான சேவைகள் அமைச்சு. கமத்தொழில், காணி, வன வள அமைச்சு. நீர்ப்பாசன, வலு, சக்தி அமைச்சு. உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக, வாணிக, உணவு அமைச்சு. கூட்டுறவு, மாகாண சபைகள், ஆயுள் வேத அமைச்சு. வீடமைப்பு, நிர்மாணத்துறை, பொது வசதிகள் அமைச்சு. நீதி, அரசியலமைப்பு அமைச்சு. தொழில், வாழ்க்கைத் தொழில் பயிற்சி அமைச்சு. விஞ்ஞான, தொழில் நுட்பவியல், மனித வள அபிவிருத்தி அமைச்சு. அஞ்சல், தொலைத் தொடர்புகள் அமைச்சு. பாதுகாப்பு அமைச்சு. ஜனாதிபதி செயலகம், பிரதமரின் அலுவலகம், எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் போன்ற முக்கியமான அலுவலகங்களில் தமிழ் பேசும் அதிகாரிகள் உயர் பதவிகளில் இல்லை. மேலதிக செயலாளர்களாகத் தமிழ் பேசும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டாலும் அவர்களுக்கு முக்கிய மற்ற சாதாரண பொறுப்புக்களே ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஏமாற்றம், திருப்தியற்ற நிலைமை மூத்த தமிழ் பேசும் உத்தியோகத்தர்களின் மனோ திடத்தைப் பாதிப்பதை தாங்கள் உணர்வீர்கள்.

திறமையாக, சுறுசுறுப்பாக, களங்கமின்றிக் கடமை புரிந்த சில மூத்த உத்தியோகத்தர்கள் அவர்களது உயர்ச்சிகளில் புறக்கணிக்கப்படுவதை நான் அவதானித்துள்ளேன்.

பொதுச் சேவையில் உயர் பதவிகளில் போதிய எண்ணிக்கையான தமிழ் பேசும் உத்தியோக்கத்தர்களை நியமிப்பதற்கு உரிய துரித நடவடிக்கை எடுப்பீர்களாயின் நான் மிகவும் நன்றியுடையவனாக இருப்பேன்.

இலங்கை நிர்வாக சேவையில் உள்ள முதல் தரத்திலான தமிழ் பேசும் உத்தியோகத்தர்களை அமைச்சின் செயல்ராளர்களாக, மேலதிக செயலாளர்களாக, திணைக்கள, கூட்டுத்தாபன தலைவர்களாக, வெளிநாட்டுத் தூதராலயம் போன்றவைகளின் தலைமை அதிகாரிகளாக நியமிக்க முடியும்.

## ஜனாதிபதியின் சமாதான தீர்வு முயற்சிக்கு இலங்கை இந்துப் பேரவை பாராட்டு

இந்து சங்கங்களது பேரவையான இலங்கை இந்துப் பேரவை இனப்பிரச்சினை தீர்வு முயற்சியில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் நிலைப்பாட்டினையும் அவரது அணுகுமுறையினையும் வரவேற்றுள்ளது.

பேரவையின் சார்பில் யோகேந்திரா துரைசுவாமி, டாக்டர் எஸ். சண்முகசுந்தரன் ஆகியோர் கையெழுத்திட்டு வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றிலேயே அவரின் தீர்வு முயற்சி வரவேற்கப்பட்டு பாராட்டப்பட்டுள்ளது.

மேலும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்

## புதிய ர
## முகாம்கள்

### ராணுவ அ

வாழைச்சேனை,

மோதல் தவிர்ப்பு உடன்பாடு அமுலுக்கு வந்த பின்னர் மட்டக்களப்பு- வாழைச்சேனை பாதையில் மாங்கேணி, கிரிமிச்சை பகுதியில் புதிதாக நிறுவப்பட்ட ராணுவ சோதனை முகாம்களை அகற்ற வேண்டுமென்று விடுதலைப்புலிகளின் அரசியல் குழுவின் பிரதித் தலைவர் கரிகாலன் தம்மை சந்தித்த இராணுவ அதிகாரிகளை கேட்டுள்ளார்.

அத்தோடு வாகரைப் பகுதிக்கு அத்தியாவசிய உணவுப்பொருள்களை எடுத்து வருவதற்கு விதிக்கப்பட்டிருக்கும் அளவுக்கட்டுப்பாடு நீக்கப்பட வேண்டுமென்றும் அவர் கோரியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் மட்டக்களப்பு வாகரை

## புலிகள் - பொல

வவுனியாவில் உள்ள
கும், விடுதலைப்புலிகளின்
இடையே வியாழனன்று
தொடர்பான நடைமுறைகள்
கள் தொடர்பாக சந்திப்பு இ
ழன் காலை 11 மணியளவில்
வீதி பூவசரங்குளம் எல்லை
நடமாட்டம் இல்லாத பகுதி
நடைபெற்றுள்ளது.

ஏற்கனவே மேற்கொள்ள
படி பூவசரங்குளம் - மன்
கட்டுப்பாட்டு எல்லையில்
வாறு இதற்கென ஒழுங்கு செ
ஸார் காத்து நின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தினகரன்
The Thinakaran


மார்கழி மாதம் 28ம் திகதி வியாழக்கிழமை

● வடக்கு, கிழக்கு ஓர் அரசியல் நிர்வாக அலகாகக் கொள்ளப்பட வேண்டும்

● 13வது அரசியலமைப்புச் சரத்திலிருந்து பேச்சு வார்த்தை முயற்சி

# தமிழ் பேசும் மக்களின் நிரந்தர அரசியல் தீர்வுக்கான அடிப்படை இவை என்கிறார் டக்ளஸ் தேவானந்தா

"வடக்கு, கிழக்கு மாகாணம் தமிழ் பேசும் மக்களின் ஓர் அரசியல் நிர்வாக அலகாகக் கொள்ளப்பட வேண்டும். அத்துடன் 13 வது அரசியல் அமைப்புச் சரத்தில் இருந்து ஆரம்பித்து அதனுடைய போதாமைகளையும் அது எவ்வாறு நடைமுறைப்படுத்த முடியாமல் போனது என்பதையும் மனதில் கொண்டு அரசியல் தீர்வு காண முற்படின் அந்த முயற்சி அர்த்தம் தருவதாக அமையும். ஐக்கிய இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் சமாதான சக வாழ்வு வாழ்வதற்கான நிரந்தர அரசியல் தீர்வை எட்டுவதற்கு இவற்றை அடிப்படையாகக் கொள்ள வேண்டியது அவசியமாகும்."



இவ்வாறு யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிச் செயலாளருமான டக்ளஸ் தேவானந்தா தினகரனுக்குத் தெரிவித்தார்.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு மிடையில் உருவாகியுள்ள மோதல் தவிர்ப்பு உடன்பாடு குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

மோதல் தவிர்ப்பு உடன்பாடு புயலுக்கு முந்திய அமைதியாக இல்லாமல், புயலுக்குப் பிந்திய அமைதியாக மாற வேண்டும். இரு தரப்பினரும் மக்களுடைய நலன்களை அவர்களுடைய அபிலாஷைகளை முன்னிறுத்திச் செயல்படுவார்களேயானால் நிச்சயம் விரைவான அமைதி நிலையான சமாதானம் ஏற்படுமென்று நம்பலாம் எனவும் டக்ளஸ் தேவானந்தா கூறினார். அவர் கூறியதாவது:-

யுத்தமில்லாத, பீதியற்ற அமைதியான சமாதான வாழ்வையே இந்த நாடும், நாட்டு மக்களும் ஏக்கத்துடன் எதிர்பார்த்திருந்த வேளையில் இந்த மோதல் தவிர்ப்பு உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது இன்னும் நெருங்கிப் பார்த்தால் இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள் தமது அவல வாழ்வு நீங்கி கௌரவமான அரசியல் சூழலில் வாழ்வதையே எதிர்பார்த்துக் கொண்டிருந்த போது சந்திரிகா அரசிற்கும்- பிரபாகரனுக்கும் இடையே இரண்டு வார கால மோதல் தவிர்ப்பு உடன்பாடு

(4ம் பக்கம் பார்க்க)

,கக்கூடிய விற்பனையுள்ள தேசிய தமிழ் நாளி

## வடக்கு,கிழக்கு.... (1ம் பக்கத் தொடர்)

ஏற்பட்டிருக்கின்றது.

நடைபெற்றுக் கொண்டிருந்த யுத்தத்தினால் எமது மக்கள் இரண்டு விதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஒன்று, இந்த யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்கியிருந்த மக்கள் தினமும் மரண பீதியிலும், நிம்மதியற்ற, கௌரவமற்ற, ஜனநாயகமற்ற, சூழலிலும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அதே வேளையில், அன்றாட பிரச்சினைகளால் தொழில்வாய்ப்பின்மை, பசி,பட்டினி, போசாக்கின்மை, போதிய வைத்திய வசதியின்மை போன்ற நாளாந்த வாழ்வின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

இதனால் இந்த மோதல் தவிர்ப்பு உடன்பாடும், அதன் ஏற்பாடுகளும் எமது மக்களுக்கும் சற்று நிம்மதியையும், நம்பிக்கையையும் வழங்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்த இடைக்கால அமைதியானது புயலுக்கு முந்திய அமைதியாக இல்லாமல் புயலுக்குப் பிந்திய அமைதியாக மாற வேண்டும். நீடிக்க வேண்டும் என்பதே எமது நிலையான உறுதியான விருப்பாகும். இதற்காக நாம் விட்டுக் கொடுக்கவும், ஒத்துழைக்கவும் தயாராகவுள்ளோம்.

ஆனால் இரண்டு கைகள் தட்டினால்தான் ஓசை எழுவது போல் உடன்பாடு கொண்ட இரு தரப்புகளும் மக்களுடைய நலன்களை, அவர்களுடைய அபிலாஷைகளை, அவர்களுடைய, எதிர்காலத்தினை கருத்தில் கொண்டு அதை முன்னிறுத்திச் செயல்படுவார்களேயானால் நிச்சயம் விரைவான அமைதி, நிலையான சமாதானம் ஏற்படுமென்று நம்பலாம். அல்லாவிடின் பழைய குருடி கதவைத் திறவடி என்ற கதையாக இந்த சமாதான முயற்சியும் முடிந்து விடும்.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'வட-கிழக்கு ஓர் அரசியல் நிருவாக அலகாக' கொள்ளப்பட்டு தீர்வு காணப்பட வேண்டும்'

## மோதல் தவிர்ப்பை வரவேற்று 'ஈ.பி.டி.பி.செயலாளர் நாயகம் அறிக்கை

மோதல் தவிர்ப்பு உடன்பாட்டை வரவேற்றுள்ள ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தமிழ் பேசும் மக்கள் சமாதான சக வாழ்வு வாழ்வதற்கான நிரந்தர அரசியல் தீர்வை எட்டுவதற்கு அடிப்படையாக கொள்ளப்பட வேண்டிய விடயம் 'வட-கிழக்கு மாகாணமானது தமிழ் பேசும் மக்களின் ஓர் 'அரசியல் நிர்வாக அலகாக கொள்ளப்பட வேண்டியது முக்கியம், என்று வலியுறுத்தியுள்ளார்.

மோதல் தவிர்ப்பு உடன் பாட்டை வரவேற்று டக்ளஸ்.தேவானந்த எம்.பி. பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

நடைபெற்றுக் கொண்டிருந்த யுத்தத்தினால் எமது மக்கள் இரண்டு விதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஒன்று இந்த யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்கியிருந்த மக்கள் தினமும் மரண பீதியிலும், நிம்மதியற்ற, கௌரவமற்ற, ஜனநாயகமற்ற சூழலில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அதேவேளையில் அன்றாட பிரச்சினைகளான தொழில் வாய்ப்பின்மை, பசி, பட்டினி, போசாக்கின்மை, போதிய வைத்திய வசதியின்மை போன்ற நாளாந்த வாழ்வின் அடிப்படை பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

இதனால், இந்த மோதல் தவிர்ப்பு உடன்பாடும், அதன் ஏற்பாடுகளும் எமது மக்களுக்கு சற்று நிம்மதியையும் நம்பிக்கையையும் வழங்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்த இடைக்கால அமைதியானது, புயலுக்கு முந்திய அமைதியாக இல்லாமல் புயலுக்கு பிந்திய அமைதியாக மாற வேண்டும். நீடிக்க வேண்டும் என்பதே எமது நிலையான உறுதியான விருப்பார்வமாகும். இதற்காக நாம் விட்டுக் கொடுக்கவும் ஒத்துழைக்கவும் தயாராகவுள்ளோம்.

ஆனால் இரண்டு கைகள் தட்டினால்தான் ஓசை

(8ஆம் பக்கம் பார்க்க)

VIRAKESARI வீரகேசரி
ஜனவரி 12ஆம் திகதி வியாழக்கிழமை 1995.

### வட-கிழக்கு....

(முன் பக்கத் தொடர்ச்சி)

எழுவது போல உடன்பாடு கொண்ட இரு தரப்புகளும் மக்களுடைய நலன்களை அவர்களுடைய அபிலாசைகளை, அவர்களுடைய எதிர்காலத்தினை கருத்தில் கொண்டு அதை முன்னிறுத்திச் செயல்படுவார்களேயானால் நிச்சயம் விரைவான அமைதி நிலையான சமாதானம் ஏற்படும் என்று நம்பலாம். அல்லாவிடின் 'பழைய குருடி கதவை திறவடி' என்ற கதையாக இந்த சமாதான முயற்சியும் முடிந்துவிடும்.

மேலும், ஐக்கிய இலங்கையினுள் தமிழ் பேசும் மக்கள் சமாதான சகவாழ்வு வாழ்வதற்கான நிரந்தர அரசியல் தீர்வை எட்டுவதற்கு அடிப்படையாக கொள்ளப்பட வேண்டிய விடயம் வடக்கு-கிழக்கு மாகாணமானது, தமிழ் பேசும் மக்களின் 'ஒரு அரசியல் நிர்வாக அலகாக கொள்ளப்பட வேண்டும் என்பது மிக முக்கியமானது என்பதுடன் 13 ஆவது அரசியல் அமைப்புச் சரத்தில் இருந்து ஆரம்பித்து அதனுடைய போதாமைகளையும், அது எவ்வாறு நடைமுறைப்படுத்த முடியாமல் போனது என்பதையும் மனதில் கொண்டு அரசியல் தீர்வு காண முற்படின் அந்த முயற்சி அர்த்தம் தருவதாக அமையும் என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்தி கூற விரும்புகிறேன்.